செ.வெ.எண்:13 நாள்–05.12.2017.

# பத்திரிக்கைச் செய்தி

கரூர் மாவட்டத்தில் 07.12.2017 அன்று கொடிநாள் அனுசரிக்கப்படவுள்ளது. இந்திய நாட்டிற்காகவும் அதன் இறையாண்மைக்காகவும் எல்லைப் பகுதியில் பணியாற்றி எதிரி நாட்டுப் படைகளுடன் போரிட்டு தமது இன்னுயிரை தியாகம் செய்த வீர மறவர்களையும் காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகளுடன் போரிட்டு இறந்த தியாகச் செம்மல்களையும் நினைவு கூறும் நாளாகவும், நாம் இங்கே நிம்மதியாக வாழ எல்லைகளை பாதுகாத்துக் கொண்டும், தீவிரவாதத்தில் இருந்து கவசமாக காத்துக் கொண்டிருக்கும் முப்படை வீரர்களுக்கு நன்றி செலுத்துவதற்காக கொடிநாள் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் நம்நாட்டிற்காக போரிட்டு இறந்த தியாகச் சுடர்களை நினைவு கூறுவதோடு நின்று விடாமல் அவர்களது குடும்பத்தினர்களின் நலனைப் பாதுகாக்க அரசு பல்வேறு உதவிகளை முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கும் செய்துவருவதுபோல் பொதுமக்களும் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களின் குடும்ப நலனுக்காக முடிந்தளவு பொருளுதவியை இந்நாளில் வாரி வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 07.12.2017 அன்று காலை 10.00 மணிக்கு ஊர்வலம் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு கரூர் பேரூந்து நிலையத்திலிருந்து கடைவீதி வழியாக ஊர்வலமாக சென்று மீண்டும் பேரூந்து நிலையத்தினை வந்தடையும்.

**செய்தி வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.**